


31.01.2025

தலைப்புச்செய்திகள்

- பொருளாதார சமூக அரசியல் நிலைத்தன்மையுடன் உலகிற்கு எடுத்துக்காட்டாக நம் நாடு திகழ்கிறது என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- 2. வளர்ச்சி அடைந்த பாரத இலக்கிற்கான நம்பிக்கையை நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
- 2024-25ஆம் நிதியாண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்று தாக்கல் செய்தார்.
- தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீராக உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி புனேயில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

***********

குடியரசு தலைவர் உரை

பொருளாதார சமூக அரசியல் நிலைத்தன்மையின் தூணாக இந்தியா உலக நாடுகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளான இன்று இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றிய குடியரசு தலைவர், எதிர்கால சந்ததியினர் 2047ஆம் ஆண்டு வலுவான வளமான திறன்மிகு இந்தியாவை கண்ணோக்குவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சிக்காகவும், மக்களின் மேம்பாட்டிற்காகவும் சீர்திருத்தம், செயலாக்கம் மாற்றம் என்ற 3 தாரக மந்திரங்களுடன் அரசு முனைப்புடன் செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

வலுவான கட்டமைப்புக்கான நடவடிக்கைகளை எடுத்துரைத்த அவர் இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் மூலம் ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக கூறினார்.

பிரதமரின் 4ஆவது கட்ட சாலை மேம்பாட்டு திட்டததின் கீழ் 70 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 ஆயிரம் பகுதிகளை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

மெட்ரோ ரயில் திட்டம் விரிவாக்கப்பட்டு வருவதை அவர் எடுத்துரைத்த அவர் கஷ்மீரையும் கன்னியாகுமரியையும் இணைக்கும் வகையில் உதம்பூர் - ஸ்ரீநகர் - பாரமுல்லா ரயில் பாதை திட்டம் நிறைவடைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

வந்தேபாரத், அம்ரித் பாரத், நமோபாரத் ரயில்கள் செயல்பட்டு வருவதை எடுத்துரைத்த அவர் தற்சார்பு வேளாண் முறையை செயல்படுத்துவதற்கான நடைமுறைகளை அரசு மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

இதன்மூலம் வேளாண் உற்பத்தியும், விவசாயிகளின் வருவாயும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அரசு முன்னுரிமை அளிப்பதாக கூறினார்.

பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையில் 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மௌசம் இயக்கத்தை அரசு தொடங்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் கிஷான் சம்மான் நிதி உதவி திட்டத்தின் கீழ் 41 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் அண்மையில் செலுத்தப்பட்டதாக குறிப்பிட்டார்.

ஒரே நாடு ஒரே தேர்தல் மற்றும் வக்ஃப் சட்ட திருத்த மசோதாக்களை முன்னெடுத்து செல்லும் வகையில் அரசு முனைப்புடன் செயலாற்றி வருவதாக கூறினார்.

3 கோடி மக்களுக்கு புதிய வீடுகள் வழங்கும் வகையில் பிரதமரின் வீட்டுவசதி திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டில் உள்ள 5 கோடி பழங்குடியின மக்கள் மேம்பாட்டிற்கான மாபெரும் இயக்கம் தொடங்கப்பட்டிருப்பதாகவும், ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்டத்தின் கீழ் 70 வயதிற்கு மேற்பட்ட 6 கோடி மூத்த குடிமக்களுக்கு காப்பீடு வழங்க வகை செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

ஸ்வமித்வா திட்டத்தின் கீழ் 25 லட்சம் சொத்து அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இளைஞர்களுக்கு கல்வி மற்றும் புதிய வாய்ப்புகளுக்கு முன்னுரிமை,

500 தொழிற்சாலைகள் மூலம் ஒரு கோடி இளையோருக்கு தொழிற்பயிற்சி போன்றவற்றிற்கு தமது அரசு முன்னுரிமை வழங்கியதாக அவர் கூறினார்.

தேசிய கல்வி கொள்கையின் கீழ் நவீன கல்விமுறை மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வருவதாகவும்,

மகளிருக்கு ஆளுமை வழங்கும் வகையில் மகளிர் தலைமையிலான வளர்ச்சிக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நிதி உள்ளடக்கத்தில் வங்கிகளும், மின்னணு பணபரிவர்த்தனைகள் முக்கிய பங்காற்றுவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் வலுவான மின்னணு கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக எடுத்துரைத்த குடியரசு தலைவர் சமூக நீதி மற்றும் சமத்துவத்திற்கான கருவியாக மின்னணு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதாக அவர் கூறினார்.

மின்னணு பணபரிமாற்றங்களால் சிறு வியாபாரிகள் பயனடைவதாக எடுத்துரைத்தார்.

செயற்கை நுண்ணறிவு பிரிவில் இந்திய செயற்கை நுண்ணறிவை முன்னெடுத்துச்செல்லும் வகையில் சிறப்பு இயக்கம் தொடங்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சைபர் குற்றங்கள் பெருகி வருவது குறித்து கவலை வெளியிட்ட குடியரசு தலைவர் சைபர் மோசடிகளை தடுக்க அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகளில் இந்திய வீர வீராங்கனைகளின் சிறப்பான செயல்பாடு குறித்து பெருமிதம் தெரிவித்த குடியரசு தலைவர் சர்வதேச தரம் வாய்ந்த விளையாட்டு சூழலை ஏற்படுத்த அரசு முனைப்புடன் செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

பிரயாக்ராஜில் மகா கும்பம் நிகழ்வு இந்தியாவின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், பிணைப்பையும் பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

***********

பிரதமர் நாடாளுமன்றம்

முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் திரு.நரேந்திரமோடி, நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வளர்ச்சி அடைந்த பாரத இலக்கிற்கான நம்பிக்கையையும், உத்வேகத்தையும் அளிக்கும் என்று கூறினார்.

வரும் 2047ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்து நூற்றாண்டை நிறைவு செய்யும் வேளையில் நம் தேசம் வளர்ச்சி அடைந்த பாரதமாக உருவெடுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மத்தியில் ஆட்சி அமைக்க 3ஆவது முறையாக மக்கள் தமக்கு வழங்கிய பொறுப்பை அடுத்து, வரும் நிதியாண்டிற்கான முழுமையான பட்ஜெட் முதல்முறையாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

கடந்த 75 ஆண்டுகளாக ஜனநாயக பாதையில் பயணித்து உலக அளவில் தன்னை இந்தியா முன்னிறுத்தி இருப்பது குறித்து பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தொடரில் பல வரலாற்று சாதனைகளோடு, ஆக்கப்பூர்வமான விவாதங்களும் இடம்பெறும் என்று அவர் கூறினார்.

நாட்டை வலுப்படுத்தும் வகையில் விரிவான சட்டங்கள் கொண்டுவரப்படுவதோடு, மகளிருக்கு சம உரிமைகள் கிடைப்பதற்கான முக்கிய முடிவுகள் இந்த கூட்டத்தொடரில் எடுக்கப்படும் என்றார்.

சீர்திருத்தம், செயலாக்கம் மாற்றங்கள் என்ற மூன்று மந்திரங்களின் அடிப்படையில் வளர்ச்சி எட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அவர் சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார்.

மத்திய மாநில அரசுகள் இணைந்து செயலாற்றுவதன் அவசியத்தை எடுத்துரைத்த அவர் இதனால் பொதுமக்களின் பங்களிப்புடன் நாடு பல ஆக்கப்பூர்வமான மாற்றங்களை காணும் என்றார்.

நம் நாட்டை வளர்ந்த தேசமாக முன்னெடுத்து செல்ல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

***********

ஓம்.பிர்லா

இந்நிலையில் குடியரசு தலைவரின் உரை நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மக்களவையில் அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் தேச வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகளை எடுத்துரைத்தார்.

அன்னாரது மறைவிற்கு இரங்கல் தீர்மானமும் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

மாநிலங்களவையிலும் மறைந்த முன்னாள் பிரதமருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

***********

நிர்மலா சீதாராமன்

இதனை தொடர்ந்து மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் 2024-25ஆம் நிதியாண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்று தாக்கல் செய்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற இரு அவைகளும் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டன.

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நாளை மக்களவையில் வரும் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்ய உள்ளார்.

***********

பட்ஜெட் வாய்ஸ்

இதனிடையே பட்ஜெட்டில் எதிர்நோக்கும் அம்சங்கள் குறித்து திருப்பூர் ஏற்றுமதி கழகத்தின் தலைவர் திரு.சுப்பிரமணியன் பேசுகையில்:

வாய்ஸ்

கோவையை சேர்ந்த தனியார் நிறுவன ஊழியரும், மோட்டார் பம்ப் செட் உதிரி பாகங்கள் தயாரிப்பாளர் சங்க உறுப்பினரும் தங்களது எதிர்பார்ப்புகளை தெரிவிக்கையில்

வாய்ஸ்

***********

ஜக்தீப்தன்கர்

நாட்டில் மகளிர் ஆளுமை பெறுவதற்கான ஆக்கப்பூர்வமான சூழல்கள் நிலவுவதாக குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் தெரிவித்தார்.

புதுதில்லியில் தேசிய மகளிர் ஆணையத்தின் நிறுவன நாள் கொண்டாட்டங்களில் இன்று உரையாற்றிய அவர் வளர்ச்சியின் கனிகளை மகளிர் சுவைத்ததை அடுத்து நாட்டில் உள்ள பெண்கள் வளர்ச்சி பாதையில் வேகமாக முன்னேறி வருவதாக குறிப்பிட்டார்.

தடைகளை தகர்த்தெரிந்து பாதுகாப்பு படை பிரிவில், முக்கிய பொறுப்புகளில் மகளிர் சிறப்பாக செயலாற்றி வருவது குறித்து அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மகளிர் பங்களிப்பு மூலமே தேசம் வளர்ச்சி பெறும் என்று எடுத்துரைத்த திரு.ஜக்தீப்தன்கர், நாடாளுமன்றத்திலும் சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

பணியிடங்கள் அரசியல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பாகுபாடுகளை மகளிர் எதிர்கொள்வதாகவும், தேசிய மகளிர் ஆணையம் அதனை களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், குறிப்பிட்டார்.

இதனிடையே சென்னையில் நடைபெறும் பார்வையற்றோர், செவிதிறன் குறைபாடுடையோருக்கான தேசிய மாநாட்டில் குடியரசு துணைத்தலைவர் இன்று சிறப்புரையாற்றுகிறார்.

***********

டெல்லி தேர்தல்

டெல்லியில் வரும் 5ஆம் தேதி நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி துவாரகாவில் இன்று பிற்பகல் நடைபெறும் தேர்தல் பேரணியில் உரையாற்றுகிறார்.

ஆம்ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு.அரவிந்த் கெஜ்ரிவால் பல்வேறு தொகுதிகளில் பொதுக்கூட்டங்களில் இன்று வாக்கு சேகரிக்கிறார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு.ராகுல் காந்தி மாடிப்பூர் பகுதியில் தேர்தல் பிரச்சார பேரணியில் பங்கேற்கிறார்.

ஏனைய அரசியல் தலைவர்களும் முனைப்புடன் தத்தம் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்குகளை திரட்டி வருகின்றனர்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதியில் வரும் 5ஆம் தேதி இடைத்தேர்தலில் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அதிகாரிகள் கணினி சுழற்சி முறையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

***********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணி பாதுகாக்கப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடைபெறும் வரும் வளர்ச்சி பணிகளை இன்று நேரில் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், வடசென்னை வளர்ச்சிக்காக ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 252 பணிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

இன்னும், ஓராண்டில் வளர்ச்சியடைந்த பகுதியாக வட சென்னை மேம்படும் என்று குறிப்பிட்டார்.

***********

கீதா ஜீவன்

தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் இன்று பேசிய அவர் உப்பு உற்பத்தி நடைபெறாத 3 மாத காலத்திற்கு உப்பள தொழிலாளர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படுவதை சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தமிழ்நாடு உப்பு உற்பத்தி கழக மேலாண் இயக்குனர் திரு.மகேஷ்வரன் தொழில்நுட்ப ரீதியாக உப்பு உற்பத்தியை அதிகரிக்க ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

***********

துரைமுருகன்

ராணிப்பேட்டை மாவட்டத்தில் வாலாஜா தடுப்பணை புனரமைப்பு பணிகள் நவீன முறையில் வலிமையாக சீரமைக்கப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் 222 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர் நாகநதியின் தடுப்பணை, பாலாறு அணைக்கட்டு தடுப்பணை உள்ளிட்ட பல்வேறு பணிகள் இதன்மூலம் மேற்கொள்ளப்படும் என்றார்.

***********

மதிவேந்தன்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் அருள்மிகு செங்கோட்டு வேலவர் திருக்கோவிலில் புதிய திருத்தேர் வெள்ளோட்டத்தை மாநில அமைச்சர் திரு.மதிவேந்தன் இன்று தொடங்கிவைத்தார்.

***********

மீனவர்கள்

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து ராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகே விசைபடகு மீனவர்கள் இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

***********

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு மாதத்தை ஒட்டி விழிப்புணர்வு நடை பேரணியை மாநில அமைச்சர்கள் திரு.சிவசங்கர், திரு.சி.வி.கணேசன் ஆகியோர் இன்று தொடங்கிவைத்து துண்டுபிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெகிழி கழிவு சேகரிப்பு முகாமை ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் கோழி கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் நாளை முதல் வரும் 14ஆம் தேதிவரை அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்களில் நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

***********

கிரிக்கெட்

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி புனேயில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

***********

மகளிர் கிரிக்கெட்

கோலாலம்பூரில் நடைபெறும் 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்திற்கு எதிராக 114 என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் இந்தியா சற்றுமுன் 6 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 44 ரன் எடுத்திருந்தது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது